ஓம்.

# ஆத்ம ஜோதி.

"எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே"—சுத்தானந்தர்.

சோதி 3 | விகிர்தி ௵ கார்த்திகை ௴ | சுடர் 1

## விசாலாட்சியம்மை துதி.

பொன்பூத்த விமயப் பொருப்புதவு புதல்வியே
போதவா னந்த வடிவே!
பொலியுமெண் ணான்கறம் வளர்த்தருளு மன்னையே
போக்குவர வற்ற பொருளே
கொன்பூத்த அயில்வேற் குமரனைத் தந்தநிர்க்
குணனிடப் பாலம் மையே
குலவுபரை யாதியனு சத்திவடி வாய்நின்ற
கோதில் கருணை வாரியே
மின்பூத்த கொடியிடைகொள் சலசைகலை மகள்பணியு
மேன்மை யுறு மாதேவியே
மிக்கபா மாலைசாத்திடுமடி.யார் வேண்டுவன
வேண்டியாங் குதவு நிதியே
தென்பூத்த நினதுபத மலரிரைஞ் சிடுமடியர்
சிந்தித்த வரமருள் செய்வாய்
செங்கமல மலர்வாவி தங்கிடு மராலிநகர்
திகழ்விசா லாட்சி யுமையே!

—ஆறுமுக நாவலர்

# நாவலர் வாழ்க!

செந்தமிழுய்யச்சைவத்திருநெறிவிளங்கவந்தோன்
அந்தமில்கல்விகேள்வியாழியைக்கடைந்துநாளும்
தந்தவன் அமுதநூல்கள்சாவிலாவரத்தைப்பெற்றான்
நந்தமிழுள்ளமட்டுநாவலன்வாழ்கமாதோ !

அங்கையினெல்லிபோலேஆகமப்பொருளுணர்ந்தோன்
சங்கரன் அருமைச்செல்வியாகியதமிழணங்கைத்
தங்கமாம்அரியணைமீதேற்றியேதமிழரான
நங்குலமுய்யச்செய்தநாவலன்வாழ்கமாதோ !

அருந்தமிழ்க்கலைமகள்கையாழெனும்யாழ்ப்பாணத்தின்
பெருந்தவப்பயனாய்ச்தென்னாடிலங்கிடப்பிறங்குஞ்சைவ
விருந்தளிமணியாய்எங்கள்வீடொளிர்விளக்காய்வந்து
பொருந்தியமுருகனன் பார்நாவலன் பொலிகமாதோ!

நற்றமிக்குரிசிலானநாவலன்வாழ்வைப்பாரீர்! [ணீர்
கற்றவன்புரிந்தசெஞ்சொற்கனிதமிழ்த்தொண்டைக்கா
பெற்றநந்தாயின்வீரப்பெருமையைநிலைநிறுத்தி
முற்றியகாதலோடுமுத்தமிழ்முழக்கஞ்செய்வீர்!

அருந்தமிழ்வாழ்க! நாளும்அறவினைபெருகச்செய்யும்
பெருந்தகையாளர்வாழ்க! பிறங்குகதவவொழுக்கம்
குருந்தடிவீற்றிருக்குங்குருமணியருளினாலே
திருந்தடியார்கள்வாழ்க! சிவநெறிதழைக்கமாதோ!

—யோகி சுத்தானந்த பாரதியார்.



# அஞ்சுவதியாதொன்றுமில்லை !
# அஞ்சவருவதுமில்லை !

---

(ஆசிரியர்)

உலகமுழுவதையும் தனது ஒரு குடைக்கீழ் ஆளவேண்டுமென்று ஆசைகொண்ட அலெக்சாந்தர், சைரஸ், டரியஸ் என்ற புகழ்பெற்ற மன்னர்களின் ஆட்சியால் முன்னாளில் சிறப்புற்றிருந்த பார்சீகத்தை வெற்றிகொண்டு, இந்துக்குஸ், ஆப்கானிஸ்தானம் மார்க்கம் மேற்கு இந்தியாவுள் நுழைந்து சிந்துநதிக்கருகிலிருந்த பாஞ்சாலத்தையும் கைப்பற்றினன். கங்கை நதிப்பிரதேசத்திலும் தன் கொடிபறக்கவேண்டுமென்ற அவனது கோரிக்கை வெறுங் கனவாய்மாறியதும், தனது தாய்நாடு திரும்பவேண்டிய நியதி அவனுக்கு ஏற்பட்டது. ஜீலநதிக்கரையில் சந்தித்த ஓர் சந்நியாசியைத் தனது இந்திய வெற்றியின் சின்னமாகத் தன்னுடன் அழைத்துச்சென்று, அலெக்சாந்திரியாவில் அவரை ஓர் காட்சிப் பொருள்போலப் பாவிக்க அவன் விரும்பினான். அரசனது உள்ளக்கிடக்கையை உணர்ந்த அச்சாது அந்த அழைப்புக்கிணங்காது மறுக்கவே, மன்னன் சினங்கொண்டு அரைத் தனது கூரியவாளுக்கிரையாக்கப் போவதாகப் பயமுறுத்தினன். அப்போது அந்த மெய்ச்சாது 'மன்னனே! உன்வாழ்நாள் முழுவதிலும் இதுபோன்ற பொய்யை நீ கூறியது கிடையாது' எனக்கூறி உடல் குலுங்கச் சிரித்தனர். அரசன் அவரின் ஏளனத்தில் ஞானங்கண்டு நல்லறிவு பெற்றுத் தன் வழிச்சென்றனன். இது நடந்தது வடநாட்டில் இற்றைக்கு 2275 ஆண்டுகளுக்கு முன்னராகும்

இந்த நிகழ்ச்சி நடந்து ஏறக்குறைய ஆயிரம் வருஷங்கள் கழிந்தபின் தென்னாட்டில் அதேவித இன்னுமோர் அற்புதக்காட்சியைக் காண்கின்றோம். சிவ அபராதத்தால் உண்டாய கொடிய சூலை நோய், சிவனைப்பணிந்து, சிவப்பணி செய்தால் நீங்கும் என்று நம்பிக்கை கொண்டு, தபோதனியாந் தமக்கையாரிடம் ஐஞ்செழுத்தும் திருநீறும் பெற்று உய்வடைந்த அப்பர் பல்லவ ராஜனான மகேந்திரவர்மனின் சினத்திற்குரியராயினர். நிலைநின்ற நமதுநெறியைத்துறந்த பொறியிலியை உயிரோடு விட்டால்

நமது சமயம் அழிவுறும்' என்று அந்த அரசன் முன்னிலையில் சமணர்கள் கூச்சலிட்டனர். உடனே அப்பருக்குக் கட்டளை சென்றது. அவரோ 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்' என்று பதிகம் பாடிப் பதிலிறுத்தனர்.

முந்திய காட்சியில் நாம் காண்பது வேதாந்த சாரமான உபநிடத உட்பொருளை. அதாவது, "ஆன்மா உள்ளே அணையா விளக்கு. உடல் இருந்தாலும் இறந்தாலும் அது போக்கு வரவற்று உள்ளபடி உள்ள விடத்திலேயே ஒளிர்வது. உண்மையில் நான் என்பது உடலைக் கடந்த ஆன்மாவே. சக்திக் கனலாய் எரிவதும், சாந்தச் சுடராய் நிலவுவதும், சுத்தசின்மயமாய் பூரண சிற்சுகவாரியாய் நிறைவதும் அதுவே. அஃதின்றி எதுவுமில்லை. நான் யார்? நான் அது, அது, அது ஆன்மா! சாவற்றவன்" என்னும் ஞானமார்க்க விளக்கத்தையே. இரண்டாங் காட்சியில் நாம் காண்பது சித்தாந்த சாரமான பக்திமார்க்கத் திறுதிநிலையான சரணாகதியின் விளக்கத்தையாகும். "நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்" என்று கூறக்கூடிய அஞ்சா நெஞ்சுறுதியை அப்பருக்களித்தது, தாமார்க்குங் குடியல்லாத் தன்மையரான சங்கரனார்க்கு மீளா அடிமையாக வாழும் பெருமித நிலையாகும்.

பெரிய புராணத்திலுள்ள வரலாறுகள் கற்பனைக் கதைகளல்ல, உண்மையில் நடைபெற்றவை, அவை விளக்கும் முறையில் பிறரும் வாழ்ந்து சித்தியடையச் சக்தியளிக்குந் தரத்தவை, என்னும் அரிய உண்மைகளை சென்ற நூற்றாண்டில் வாக்காலும் வாழ்க்கையாலும் விபரித்துக் காட்டியவர் நாவலர் பெருமான். அவரது வாழ்க்கையில் நாம் காணும் அச்சமின்மை அவர் வரலாற்றைப் படிப்பவர்க்கு 'விடுதலை' 'சுதந்திரம்' எனும் சொற்கள் நித்தியம் கேட்கப்படும் இருபதாவது நூற்றாண்டிலேயே, அச்சத்தையும் மயிர்க்கூச்சலையும் தருந்தரத்ததாகும். அரசியல் அநீதிகளை எதிர்த்தும், அந்நிய மதத்தினரின் சூழ்ச்சிகளைத் தாக்கியும், நமது ஆலயங்களிலுள்ள ஊழல்களைக் கண்டித்தும் அவர் செய்த கிளர்ச்சிகள் பல. முதலில் வாழ்வால் நடந்துகாட்டி, பின்னர் வாயாற் பேசி, அதன்பிறகே நூல்களாக எழுதி உலகிற்கு உயர் சிவநெறியை விளக்கிய இந்த மகானை காலம் அறிந்து கொ

ள்ளவில்லை, ஆகையால் அவர் கிளர்ச்சிகளைப் பல தன்னலப் புலிகளும், ஆசாரக்கள்வரும், பதவிவேட்டைக் குலாமிகளும் எதிர்த்தனர். அவரைக் கொல்லக்கூடச் சிலர் சூழ்ச்சிசெய்தனர். இச் சதிச்செய்தி நாவலர் செவிக்கெட்டியபோது அவர் என்ன செய்தார்? நாம் இன்று நம்நாட்டில் காணும் பல தலைவர்கள் போல அவர் அஞ்சி, நடுங்கி மறையவில்லை; மிரள மிரள விளிக்கவுமில்லை; வீட்டின் கதவைத் தாழிட்டு தெருவில் காவல் வைக்கவுமில்லை. எவரும் வரலாமென அழைப்பவர்போல் வீட்டைத் திறந்துவைத்து, ஐந்தெழுத்தோதித் திருநீறணிந்து, திருமுருகாற்றுப்படையைப் பாராயணஞ்செய்துகொண்டிருந்தனர். இக் காட்சியைக்கண்ட கொலையாளர் தலைவணங்கி, குலைநடுங்க வந்தவழியே திரும்பிச்சென்றனர். எனினும், நாவலரின் உறவினர் பின்னும் அஞ்சினர். அவர்கட்கு அவர் 'சிவனிருக்கிறன், சத்தியம் வெல்லும்' என்று தைரியங்கூறினர்.

உண்மையான அச்சமின்மை வரவேண்டுமெனில், வாழ்வில் சீலமும், தியாகமும், சத்தியமும் நிராசையும் நிலைபெறவேண்டும். இப்போதுள்ள பதவிக்கு எப்போதாவது மோசம்வந்துவிடுமோ என்ற கிலேசமும், அதைப்பெற ஆதரவுதந்தவர்கள் பின்னர் அதை மறுக்காவிதத்தில் அவர்களை ஏமாற்றும் தந்திரமும், சூழ்ச்சியும், கபடமும் சதா நிறைந்துள்ள உள்ளத்தில் அச்சமின்மைக்கிடமேது? அஞ்சத்தக்கவையான மது, சூது, வாது முதலானவற்றைக் கண்டு அஞ்சாத நெஞ்சினரை தெய்வீகக்குணங்களுள் தலையாய அச்சமின்மை அணுகவேமாட்டாது. நாவலராகவும் காந்தியாகவும் பேரெடுக்க விரும்பி நடக்கும் தலைவர்கள் அந்த மகான்களுக்கு இறவாப்புகழைத் தேடிக்கொடுத்த ஒழுக்கத்தை முதலில் பேணுவார்களாக. நாவலரின் வாழ்க்கையும் வாக்கும் நமக்குச் சதாநினைவூட்டும் முக்கியஉண்மை இதுவே.

அவரின் குருபூசைத்திருநாள் கார்த்திகைமாச மக நட்சத்திரமாகும். அச்சுபதினம் இந்தஆண்டில் கார்த்திகை மாதம் பதினைந்தேதி (1-12-50) வெள்ளிக்கிழமை பொருந்தியுள்ளது. இத் தொடர்பில் இம்மாச 'ஆத்மஜோதி' அவரின் திருவுருவப்பொலிவுடன் வெளிவருகின்றது.

அச்சமுற்று அடிமைகளாய அயலார்க்கஞ்சி
அன்னியரின் மதம்புகுந்து அவர்தங்கையால்
பிச்சைபெறும் நிலைபடைந்த பேதைமாக்கள்
பிறப்புரிமை சிறப்பாக எடுத்துக்காட்டிப்
பச்சைமரத் தாணிபோற் பதியுஞ்சொல்லாற்
பாதிரிமார் வாயடங்கப் பதிலுங்கூறி
இச்சகத்தில் எம்சைவந் தழைக்கச்செய்த
எழில்நல்லை நாவலன்றாள் வணங்கிவாழ்வாம்.

# சிவ சொத்து.

——;-:——

[சுத்தானந்தர்]

தமக்குரிமையில்லாத பொருளை நாவலர் மனத்தாலும் தீண்டார்; பிறரும் சுயநலத்துடன் அபகரிப்பதைக் கண்டிப்பார். மிதன்மையாகச் சிவ சொத்தை எவராயினும் துர் விநியோகம் செய்தாலும், பலமாகச் சண்டைபோட்டு அதைச் சிவார்ப்பணமாக்குவார். ஓர் உதாரணம் காண்போம்; சிதம்பரத்திற்கு அருகேயுள்ள சிவபுரியில் வெள்ளந்தாங்கி ஆறுமுகம் பிள்ளை என்னும் அன்பர் இருந்தார். அவர் நாவலரிடம் பேரன்புடையவர்; அவர் பல்லக்கேறும் செல்வர்; நாவலர் வசிக்குமிடத்திற்குச் சிறிது தூரத்திலேயே சிவிகை விட்டிறங்கி மரியாதையுடன் சென்று ஐந்தாங் குரவரை வணங்குவார். வெள்ளந்தாங்கியில் நாற்பது வேலிநிலம் உண்டு' அது சிதம்பரம் சிவகாமியம்மைக்குத் தருமசானமானது; அந்த நிலத்தையும் ஆறுமுகம்பிள்ளை அநுபவித்துவந்தார்; இதை நாவலர் கண்டு கண்டித்தார். நிலத்தைச் சிவகாமிக்கே அர்ப்பணித்துச் சிவ கைங்கரியம் செய்யப் பன்முறை வற்புறுத்தினர்; பிள்ளை கேட்கவில்லை. ஒருநாள் ,'சிவசொத்து குலநாசம்; அதைத் திருடி அநுபவிப்பவன் மனிதனு" என்றெல்லாம் காரமாகப் பேசிவிட்டார் நாவலர். செல்வர் ஆறுமுகம்பிள்ளை பிராது செய்தார்; பலமான வக்கீல் வைத்துத் தன் பக்கம் தீர்ப்பு வாங்கினர். நாவலர் தாம் கடுமையாகப் பேசியதை ஒப்புக்கொண்டு அதற்கு நியாயமும் சொல்லி எழுபது ரூபா அபராதம் கட்டினர். அப்பீல் செய்தால் அவர் பக்கம் பிறந்திருக்கும்; நாவலர் மறுத்துவிட்டு 1867-ல் சிவபுரிமடத்து வர்ரிசு வைத்திலிங்கம் என்பவரைக் கொண்டு வியாச்சியம் செப்வித்தார். அதன்படி விளைநிலங்களை அநுபவித்த காலத்தில் வந்த வரும்படி சகிதம் நிலத்தை வாங்கிக் கொடுத்தார். மலையாளம் ஜட்ஜாயிருந்த செல்லப்பபிள்ளை நாவலர் பக்கம் பேசி மஞ்சக்குப்பம் கோர்ட்டு அசல் எண் 2 ஆகிய இவ்வியாச்சியத்தைச் செயித்துக்கொடுத்தார். ஆறுமுகம்பிள்ளை தன் அபராதத்தை உணர்ந்து மன்னிப்புக்கேட்டார். இன்று வெள்ளந்தாங்கி நிலம் சிவகாமி சொத்தாகி, சிவபுரம் மடத்தின் நிர்வாகத்தில் உள்ளது.

# நன்மைத் துணுக்குகள்.

(நாவலர்)

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால், நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்.

எவ்வளவு அதிக இரகசியமாகச் செய்யப்படும் நன்மைகளையும் முற்றறிவுடைய கடவுள் அறிந்து, பயன் அளிப்பார்; பிறர் அறிந்தென்! அறியாதிருந்தென்!

அறிவும் அதனாலாகிய நற்குண நற்செய்கைகளும் உள்ள சான்றோர் களாலே நன்கு மதிக்கப்படுதற்கு யோக்கியனாய் இரு.

நாம் செல்வத்தையும் உபசரிக்கப்படுதலையும்' நம்முடைய பிரீதிக்கு மாறாக இழத்தல் கூடும்; நல்லொழுக்கத்தையே அப்படி இழத்தல் கூடாது.

நீ பிறருக்கு ஒன்றை வாக்குத்தத்தம் செய்யுமுன் அது உன்னால் இயலுமோ இயலாதோ என ஆராய்ந்து கொள்.

நாம் இரகசியமாகக் குற்றம் செய்யும்போது, பிறர் நம்மைக் கண்டியா வண்ணம் தப்பிக்கொள்ளுவோமாயினும், நம்முடைய மனம் நம்மைக் கண்டியா வண்ணம் தப்பித்துக்கொள்ள மாட்டோமே.

உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவற்ற களஞ்சியம்.

வருவாய்க்குத் தக்க வாழ்க்கை இல்லாத பொழுது செல்வராவார் ஒருவரும் இலர்: அது உள்ளபொழுது வறியராவர் மிக அரியர்.

நாம் செய்த குற்றங்களை நாமே வெளிப்படுத்திப் பச்சாத்தாபப் படுவோமாயின், அறிவினால் மூத்த பெரியோர்கள் நம்மேல் இரங்கி; அவைகளைப் பொறுத்துக் கொள்வார்கள்.

நம்முடைய குற்றங்கள் இவைகள் என்று நமக்குத் தெரிவித்து அவைகளை நீக்கி நடக்கும் நெறியை நமக்குப் போதிக்கின்றவர்களே நமக்கு உத்தம சிநேகிதர்கள்.

தரித்திரனாய் இருக்கும்போது திருத்தியடையாதவன் செலவனாயபோதும் திருத்தியடையான்; திருத்தியடையாமை மனக்குற்றமே அன்றிப் பொருட்குற்றம் அன்று.

உன்னால் உன் தாய் தந்தையருக்குக் கிடைத்த உபகாரமே அதுகண்ட உன்பிள்ளைகளால், உனக்குக் கிடைக்கும்.

பாவம் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இல்லையாயின், பாபம் செய்பவர்களும் இலர்; ஆதலால் பாவம் செய்பவர்களினும் அவர்களை நன்கு மதிப்பவர்களே பெரும் பாவிகள்.

பகைவர், அயலோர், நட்பினர் என்னும் மூவகையோரிடத்தும், தருமத்தின் வழுவாமல், ஒப்பநிற்றல் நடுவு நிலைமை எனப்படும்,

சரீரவருத்தத்திற்கு அஞ்சிப் பிறதொழில்களைச் செய்து பொருள்பெற்றும் உணவின் பொருட்டு வேளாளரிடத்துச் செல்லல் வேண்டுதலாலும், பொய் முதலிய பாவம் கலவாமையாலும் வேளாண்மைக்கு நிகராவது ஒன்றும் இல்லை.

செல்வம் முதலியவற்றினாலே செருக்கடைந்து முன் உன்னோடு பயின்ற சிநேகிதரை மறந்துவிடாதே.

பிறர் பொருளானது உடல் உயிர் இரண்டிற்கும் ஊறுசெய்தலால் உடல் ஒன்றிற்கே ஊறுசெய்யும் விஷத்தினும் கொடிதாம்

உண்ணும் வகையறிந்து உண்ணுவதலும், உண்டபின் நூறடி உலாவுதலும், பகலிலே நித்திரை செய்யாமையும், வாரந்தோறும் எண்ணெய் இட்டுத் தலைமுழுகுதலும் உளவாயின், உடம்பிலே நோய் உண்டாகாது.

கல்வியறிவொழுக்கங்களாலும் ஈசுவர பக்தியினாலும் சிறந்துவிளங்கும் போதகர்களைக் கொண்டு, தேவாலயங்களிலும், புண்ணிய தீர்த்தக் கரைகளிலும், மடங்களிலும்' சனங்களுக்குச் சமையத்தைப் போதிப்பித்தல் வேண்டும். இதுவே எல்லாத் தருமங்களினும் மேலாகிய தருமம்.

# உள்ளமே கோயில்.

——:-:——

(கருணாநேர்தன்)

ஒரு எழுதுகோலும் கடதாசியுமெடுத்து ஒரு வட்டமிடுங்கள். அதனுள் வேறொரு வட்டம் கீறுங்கள். இரண்டாவது வட்டத்தினுள்ளும் இன்னொரு வட்டம் வரையுங்கள். நீங்கள் வரைவது ஓர் இலக்குக்குறி போன்றிருத்தல் வேண்டும்.

அது ஒரு மனிதனில் மூன்றில் மூன்றை($\frac{3}{3}$)க்குறிக்கிறது அது உங்களைப் பிரதிபலித்துக்காட்டுகிறது:—(1) வெளிவட்டம் உங்களின் மூன்றில் முதலாவது பங்கு—உங்கள் உடம்பு. (2) இரண்டாவது வட்டம் உங்களுடைய மூன்றில் இரண்டாவது பகுதி—உங்களுடைய மனம். (3) மூன்றாவது வட்டம் அல்லது நடுவட்டம் உங்களது மூன்றில் மூன்றாவது பாகம்—உங்கள் ஆன்மா.

மூன்றில் முதலாவது பிரதானமானது. பலமுள்ள ஆரோக்கியமான உடம்பு மிகப்பிரதானம். ஆயின் தேகபலமே எல்லாமல்ல. ஒரு நல்ல அடி பந்தாட்டக்காரனாகவோ உதை பந்தாட்டக்காரனாகவோ இருப்பது ஒரு கண்ணியமான காரியந்தான். ஆனால் அதுவே அதிமுக்கியமான காரியமன்று.

தனது தேகத்தை வில்லாக வளைத்து, விசேட உடையணிந்து, 3000 றாத்தல் நிறையுள்ள ஈயத்தைச் சுமக்கக்கூடிய ஒரு மனிதன் இருந்தானும். இன்னொருமனிதன் 12 மனிதரும் 3பிள்ளைகளுமடங்கிய கூர்நுனிக் கோபுரம் ஒன்றைத் தாங்கினானும். ஆனால் ஒரு யானை அதிலும் அதிக பளுவான பாரத்தைச் சுமக்கக்கூடும். புலி அதிக பலமுள்ள ஒரு மனிதனைப் பார்க்கிலும் பலமானது. சிங்கம் ஒரு மிகக் கெட்டித்தனமுள்ள தூரம் பாய்பவனிலும் பார்க்க அதிக தூரம் பாய வல்லது. குதிரை குறிப்பிட்ட 100யார் தூரத்தைக் காட்டிலும் அதிகம் விரைவாய் ஓடக்கூடியது. ஆயினும் மனிதர் மிருகங்களிலும் மேலானவர்கள். பலத்தினாலன்று; ஏனெனில் அவைகள் மனிதரை வேகத்திலும் சகிப்பிலும் வெல்லுகின்றன; ஆனால் எங்களுக்குள்ளனவும் அவைகளுக்கில்லனவுமாகிய உயர் குணங்களாலேயே நாம் மேல்.

மனிதனின் மூன்றில் இரண்டாவது பங்கு அவனது மனமாகும். இதிலும் நாம் மிருகங்களுக்குமேல் (உயர்ந்தவர்கள்). நாம் நமது மனங்களைப் பண்படுத்துதல் மிகமுக்கியம். அண்ணாந்து விண்மீன்களைப் பாருங்கள். அவை அநந்தம் அதிசயமும் அற்புதமுமாய் அமைந்திருக்கின்றன. கடவுளின் வேலைகள் மிகப்பெரியவை. ஆனால் மனிதனின் மனமே இவையனைத்திலும் பெரியது. அது இவையனைத்தையும்பற்றிக் கிரகிக்கக்கூடியதாயிருக்கின்றது.

இந்த மனமேயாவுமல்ல. ஒரு பையன் நல்ல கெட்டிக்காரனாயிருக்கலாம், ஆயினும் அவன் தன் சீவியத்தைப் பாழாக்கிக்கொண்டு மிருகங்களிலும் பார்க்க மிகக் கேவல நிலைக்கிறங்காமல் ஒரு வாலிபன் உயர்தரப் பரீட்சை யொன்றில் சித்திபெய்தினான். அவன் ஓர் அநுகூலமான சந்தோஷவாழ்க்கையை அடைவான்போலத் தோன்றினது. குடியினாலும் வியபிசாரத்தினாலும் கொல்லப்பட்டு ஒரு வருடத்துள் அவன் இறந்து பட்டான். அவனது பலமான மனம்—மூளை—அவனைக் காப்பாற்றத் தவறி விட்டது. மனம் மக்களினது, பண்படுத்தப்பட்டு விலைமதிக்கப்படவேண்டிய மிகமுக்கியமான மூன்றில் ஒருபாகம். ஆனால் அதுவே எல்லாமல்ல.

அனேகர் தாங்கள் மூன்றில் இரண்டுபங்குபோன்றே வாழ்க்கை நடத்துகிறார்கள்-மூன்றில் மூன்றுபோன்றல்ல. அவர்கள் தங்களுள் அதியுன்னத பாகமான ஆன்மாவை விட்டுவிடுகிறார்கள். மனிதனின் மூன்றில் மூன்றாவதாகிய இந்தப் பாகத்துக்கு மிகமுக்கியம்வாய்ந்த மேன்மைபொருந்தியதொரு வேலைகொடுக்கப்பட்டிருக்கிறது. அது மனிதனுள் ஒரு வாசஸ்தானமாக வைக்கப்பட்டிருக்கிறது. 'யார் அதில் வசிப்பவர்? என்பது கேள்வி. ஆன்மாவுக்குள் அந்தராத்மாவாய் அமரக்கூடிய அருகதை யாருக்குண்டு?

ஆன்மா கடவுளுக்கே வசிப்பிடமாகக் கருதப்பட்டுள்ளது. நமக்கு நமது இஷ்டம்—தெரிவு—உண்டு. நீர் உமது உரிமையுள்ள ஆத்ம நாதரை (ஆன்ம நாயகரை) உமது ஆன்மாவை ஆட்சிபுரியுமாறு அழைப்பீரா? அழுகையே—பிரார்த்தனையே-அதற்குரிய அரியவழி. 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்றார் மாணிக்கவாசகனார்.

"அழுமவர்க்கு அன்பன் ஆனைக்கா அண்ணலே"

"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்குநிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்"

என்றார் நாவுக்கரசர்.

கடவுளை நீர் அந்தராத்மனாய் அமர்ந்தருளும்படி அழைப்பீ ராயின் அவர் உமது வாழ்வு முழுவதையும் கட்டுப்படுத்துவார். உமது தேகமும் மனமும், கடவுளது மகிமைக்கும் உமது சந் தோஷம் சமாதானங்களுக்குமாகக் காப்பாற்றப்பட்டு, தத்தம் வேலைகளைச் சரிவரப் பூர்த்தியாக்குமாறு செய்யப்பெறும்.

தேகத்தை மனமும், மனத்தை அறிவும் (ஆத்ம போதமும்) அறிவை அருளும் (அருட்போதமும்) அடையவே இயக்குகின்றன இவ்வுண்மையை நாம் என்றும் மறவாதிருப்போமாயின் 'எல் லாந் திருவருட்செயல்,' 'அவனன்றி யோர் அணுவுமசையாது. என்ற ஆன்றோர் வாக்குகளை அனுபவித்தறிய வல்லவர்களா வோம். கண்ணானது ஒளியுடைப்பொருளாயினும் தானாகவே ஒன்றைக் காணமாட்டாது. அதற்குக் கண்டுகாட்ட அருக்கனொ ளியோ அக்கினியொளியோ அவசியமாதல்போல மனித அறிவா கிய ஆத்மபோதத்திற்குத் தெய்வ அருளாகிய அருட்போதம் (ஆத்மஜோதி) கண்டுகாட்டற்கு அவசியமாகின்றது.

மூன்றில் மூன்று ஒன்று ($\frac{3}{3}=1$) ஆதல்போல, மனிதன் உ டல், உளம், உயிர் ஒன்றி நின்று—ஒருமைப்பாடுற்று—இறை வனை அந்தரியாமியாகக் கண்டு, பிரார்த்தனை தியானம் ஆதியவற் றால் பெரிதும் வழிபட்டு, சிவோகம் பாவனைசெய்து, இறைவனோடு இரண்டறக் கலந்து ஒன்றுதலே இறைவழிபாட்டின் உயரிய நோ க்கமாகும். இதுவே நமது பிறவிப்பயனுமாகும்.

"உள்ளமே கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுர வாயில்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே."

# பிரம்மானந்தம்.

---:-:---

(தென்னாப்பிரிகா டர்பன் திரு. ச. மு. பிள்ளை அவர்கள்)

இப் பிரபஞ்சத்தில் மக்கள் யாவரும் சுகமாக வாழவேண்டுமென்று, வாழ்க்கையில் ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டுமென்றும்தான் ஆசைப்படுகின்றனர். ஆசைப்படுவதுடன் நிற்பதில்லை அப்பேர்ப்பட்ட ஆனந்தத்தை அனுபவிக்கும் மார்க்கங்களை தேடுகின்றனர். நம்தேசத்து ஜனங்கள் மாத்திரமல்ல, உலகத்தில் எல்லா தேசத்து ஜனங்களும், எல்லா காலங்களிலும் இதுவே சிந்தையாக தேடி அலைந்திருக்கிறார்கள். வாழ்க்கையில் இன்பமிருக்கிறது என்னும் எண்ணமிருப்பதால்தான் இன்பமற்று வாழுகின்றவர்களும் சகித்து வாழ்க்கையை நடத்துகின்றனர். அந்த எண்ணம்தான் கஷ்ட வாழ்க்கையிலுள்ள வர்களுக்கும், உயிரை வைத்துக்கொண்டிருக்க மனோதிடத்தைக் கொடுக்கிறது.

வாழ்க்கையில் இன்பத்தையும் ஆனந்தத்தையும் நாடிய எல்லாத் துறைகளிலும், மக்கள் எவ்வளவு தூரம் சென்று பார்க்க முடியுமோ அவ்வளவு தூரமும் பார்த்துவிட்டார்கள். சித்திரக்காரர்கள் ஆனந்தத்தின் சொரூபத்தை தங்களுடைய மாயை மையினால் எழுதி உருவகப்படுத்தி விடலாமென்று, பிரம்மப் பிரயத்தனம் செய்து பார்த்தார்கள். அவர்கள் செய்த பிரயத்தனமெல்லாம் வீணாயின. சித்திரக் கலைக்கு எட்டாததாக இருந்தது அந்த ஆனந்த சொரூபம்.

சங்கீத வித்துவான்கள் தங்கள் இசையின் சக்தியினால். ஆனந்தத்தின் சொரூபத்தை பார்க்க பிரயத்தனம் செய்தனர். அவர்களாலும் முடியவில்லை. கவிவாணர்கள் தங்கள் பாட்டின் திறமையினாலே கண்டுவிடலாமென்று எண்ணினார்கள். எவ்வளவோ உயர உயரப் பறந்து பாடினார்கள். அவர்கள் பாட்டுக்கும் அப்பாலிருந்தது அந்த ஆனந்த சொரூபம்.

உலகம் உண்டான காலம்தொட்டு இன்றுவரையில் படித்தவர்களும், படிப்பில்லாதவர்களும், கலா சாஸ்திர நிபுணர்களும், மேதாவிகளும் பிரயத்தனப்பட்டும் கிடைக்காத அந்த ஆனந்த

சொரூபத்தைக் கண்டு அனுபவிக்க வேண்டுமென்னும் ஆவல் இப்பொழுதாவது மக்கள் மனதிலிருந்து நீங்கிற்றோ என்று பார்த்தால், இன்னும் அந்த ஆசை நீங்கவில்லை. இன்னும் பிரயத்தனம் செய்வது நின்றபாடில்லை.

வானத்தில் தோன்றும் விதவிதமான வர்ணம் தீட்டிய வானவில்லை, சிறுவன் ஒருவன் பார்க்கின்றான். அந்த வில் வெகு அருகில் இருப்பதாக அவனுக்குத் தோன்றுகிறது. அதைத் தொட்டு தடவிப் பார்க்கவேண்டுமென்று ஆசை அவன் மனதில் ஏற்படுகின்றது. கொஞ்சத்தூரம் ஓடினால் அந்த வில்லின் அருகில் சென்றுவிடலாமென்று அவன் ஓடுகிறான். அவன் ஓட ஓட, வில்லும் ஓடிக்கொண்டேயிருக்கிறது. அதுபோலத்தான் ஆனந்த சொரூபத்தைக் காண மார்க்கம் தேடியவர்கள் கதியும் ஆயிற்று.

அப்பேர்ப்பட்ட ஆனந்த சொரூபத்தை இந்த ஜகத்தில் கண்டவர்கள் கிடையாதென்று சொல்ல வரவில்லை. பெரும்பாலோரின் பிரயாசை வீணாயிற்றெனினும் அந்த ஆனந்தத்தைக் கண்டு அனுபவித்த மகான்கள் சிலரும் இந்த உலகத்தில் இருந்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட மகானுபவர்கள் தங்களுடைய அனுபவத்தையும், ஆனந்தத்தையும் கண்டுபிடிக்கும் மார்க்கத்தையும் மனமிரங்கி மக்களுக்கு உபதேசித்திருக்கிறார்கள்.

உலகத்திலுள்ள சமயங்கள் பலவற்றில் ஒவ்வொன்றிலும் பிரம்மானந்த சொரூபத்தை அனுபவித்த சாதுக்களின் சரித்திரங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. பிரம்மானந்தத்தை அனுபவிக்க விரும்பும் நாம் அதிகமாகப் பிரயாசப்படவேண்டியதில்லை. படவேண்டிய பிரயாசைகளெல்லாம் அந்த சாதுக்கள் பட்டாகிவிட்டது. இனி அவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றினால் அவர்கள் அனுபவித்த பிரம்மானந்தத்தை நாமும் அனுபவிக்கமுடியும்.

பிரம்மானந்தத்தை அனுபவித்த மகானுபவர்களில் சாலமன் என்பவர் ஒருவர். இந்தமகானுக்கு 'மேதாவி சாலமன்' என்று பெயர் வழங்குகிறது. கிறிஸ்தவ வேதங்களில் பிரஸ்தாபித்திருக்கும் சாலமன் இவர்தான். அந்த சாலமன் பெரியார் பிரம்மானந்தத்தை அனுபவிக்க சித்தங்கொண்டார். ஒரு மனிதன் கல்வி ஞானத்தினால் பிரம்மானந்தத்தை அனுபவித்துவிட முடியுமெ

ன்று அவர் முதலில் எண்ணினார். அவர் உலகத்திலுள்ள சகல கலைகளையும் படித்தார், சகல சாஸ்திரங்களையும் படித்தார், சகல தேசமக்கள் சரித்திரங்களையும், அவர்கள் தொழும் கடவுள்களின் சரித்திரங்களையும், அவர்கள் பின்பற்றும் சமயங்களின் தத்துவங்களையும் படித்தார். வெறும் படிப்பு மாத்திரமல்ல. படித்து அவற்றின் உட்கருத்துகளையும் தெரிந்துகொண்டார். அவர் பகவானுக்கிரகம் பெற்றவர் என்று ஜனங்கள் சொல்லும்படி அவ்வளவு அமோகமாக ஞானம் எய்தினார்.

அவ்வளவு ஜானம் சம்பாதித்த அந்த சாலமன் ஞானியை, "பிரம்மானந்தத்தை அனுபவித்தீரா?" என்று கேட்டபோது "படிப்பு அதிகரிக்க, அதிகரிக்க துயரம்தான் அதிகரிக்கின்றது. எவனொருவன் பாண்டித்யத்தை மாத்திரம் பிரமாதமாகக் கருதி அதை நாடுகின்றானோ அவன் துயரத்தை நாடுகிறான்," என்று பதில் சொல்லிவிட்டார்.

"நான் படித்தவைகளெல்லாம் எதற்குப் பயன்? அவைகள் என்மனதைக் குழப்புகின்றன; என் கர்வத்தை வளர்த்தன; நான் கண்டபலன் இவ்வளவுதான்;" என்று அந்த மகான் சொன்னார்.

சாலமன் பெரியார்தான் அக்காலத்தில் அவ்விதம் சொன்னாரென்றால், இக்காலத்தில் இயற்கை சாஸ்திர நிபுணரென்றும் அவதார புருஷர் என்றும் கருதப்படும் 80 வயதான தொண்டுகிழவர் எடிசன் என்ன சொல்லுகிறார்! அவருடைய 80-வது ஆண்டு பிறந்ததினத்தன்று 'ஆனந்த வாழ்க்கை வாழ வழி என்னவென்பதை சொல்ல முடியுமா'? என்று கேட்டதற்கு, "இந்த உலகத்தில் ஆனந்தமனுபவித்த மானிடனை நான் கண்டதில்லை," என்று அவர் சொல்லிவிட்டார்.

ஆகவே முற்காலத்து முனிவர்களும் நவீனகாலத்து வித்வான்களும் ஒரு விஷயத்தில் அபிப்பிராய பேதமில்லாமல் பதில் சொல்லிவிட்டார்கள். அதாவது புத்தகப்படிப்பினாலும், அதனால் ஏற்படும் ஞானத்தினாலும் மனிதன் ஆனந்தமனுபவிக்கமுடியாதென்பது.

சாலமன் பெரியாரின் சரித்திரத்தை இன்னும் கொஞ்சம் தொடர்ந்து கவனிப்போம். புத்தகப்படிப்பு ஞானம்தான் பிர

யோஜனமில்லை என்று ஆயிற்றே, செல்வத்தினால், ஆனந்தம் அனுபவிக்க முடியுமாவென்பதையும் பார்த்துவிடவேண்டுமென்று அவருக்குத் தோன்றிற்று. அவர் செல்வம் தேடத்தொடங்கினார். இந்த உலகத்தில் அவரைவிட செல்வவந்தர் கிடையாது என்று சொல்லக்கூடிய செல்வத்தை சம்பாதித்தார். ராஜபோக வாழ்க்கையும் நடத்தத் தொடங்கினார். ஏழு அடுக்கு மாளிகையும், அதைச்சுற்றி நந்தவனமும், நந்தவனத்தில் பெரிய தடாகங்களும் அமைத்துக்கொண்டார். தினம் விருந்துகள்தான். உலகத்தில் எங்கு விளையும் பழங்களும், அவருடைய போஜனத்திற்கு வந்தாகவேண்டும். மதுரமான பானங்கள் நினைத்தபோதெல்லாம் எவ்வளவு வேண்டுமோ, அவ்வளவும் கிடைக்கவேண்டும்.

அவ்வளவு ராஜாங்கமாக வாழ்ந்த சாலமன் பெரியாரைப்பார்த்து "ஆனந்தம் கண்டீரா?" என்று கேட்டபோது "ராஜாங்க கனவு கண்டேன்" என்று பதிலுரைத்தார். அதன்பின் அவர் பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டார். அவருடைய அந்திய காலத்தில் நண்பர்கள் அவரை பிரமானந்த அனுபவத்தைக் குறித்து தெரிவிக்கும்படி பிரார்த்தித்தார்கள். "கடவுளிடம் பக்திகொண்டு அவன் உபதேச வழியைப் பின்பற்றுங்கள். அதிலேதான் பிரம்மானந்தம் இருக்கிறது" என்று அவர் சொன்னார்.

ஆகவே, உலகம் நாகரீகமடைய வேண்டுமாயின் நிர்மூலமாகிவிடாமல் தப்பிப் பிழைக்கவேண்டுமாயின் பகவத் பக்தி முறையை ஜனங்கள் கடைப்பிடிக்கும்படி செய்வதொழிய வேறுவழியில்லை. அந்த பழைய வழிதான் இக்காலத்திலும் உலகத்தைக் காப்பாற்றவல்லது.

---

சீர்பூத்த கருவிநூல் உணர்ச்சி தேங்கச்
　　சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
　　பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
　　பிறைபூத்த சடைமௌலிப் பிரானார் தந்த
வார்பூத்த அறிவிச்சை தொழிலென் றோதும்
　　மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்!

— நாவலர்.

முற்றொடர்ச்சி

# 'தொழுவார் தங்கள் துயர் தீர்ப்பாய்'

——:-;——

(பிரமசாரி சோமசுந்தரம்)

தாங்கள் துய்க்கும் துன்பத்துக்குக் காரணம் கடவுள்தான் என்று கருதுவார் பலர் உண்டு. வாழ்வில் எல்லாம் இன்பமாக இருக்கும்போது அன்னவர் இறைவனைப்பற்றி ஒன்றும் எண்ணுவதும் பகர்வதும் இல்லை. கேடு ஏதேனும் வரும்போதுதான் அவர்கள் கடவுளைக் கடியவும் சபிக்கவும் செய்கின்றனர். ஈசுவர கடாட்சம் சூரிய வெப்பம் போன்றது. அல்லது வானத்தினின்று பொழியும் மழைபோன்றது. எங்கும் சமமாக எல்லார்க்கும் பொதுவாக அருள் வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்கிறது. மனிதன் கடவுள்மீது குறை கூறவேண்டியது அவசியமில்லை; உலகத்தையும் பழிக்கவேண்டியதில்லை. அருட்தாக முடையார்க்கும் உள்ளத்தை ஒழுங்குபடுத்த முயல்பவர்க்கும் அனைத்தும் கைகூடுகின்றது. ஆதலால் நன்னெறியை நாடி ஆசைப்படுவது நெஞ்சத்தின் தன்மை. அங்ஙனம் ஆசைகொள்ளுதலில் குற்றமொன்றுமில்லை; ஆனால் எதை வேண்ட அவாவுறுதல் என்பது தான் கேள்வி. கேடுடைய சில ஆசைகள் அசாந்தியை சஞ்சலத்தை யூட்டுகின்றன. கட்டழகை முகவிலாசத்தை, மனிதன் வலிவை, தூய்மையை பகுத்தறிவென்னும் ஞானதீபத்தின் சுடரைக் குறைத்துக் கெடுத்துப் பாழ்படுத்தி விடுகின்றன. இத்தகைய கீழான ஆசைதான்பகைவனைப்போன்றது; இதைப் பாராட்டுதல் ஒண்ணாது. இதைப் பாசமென்று தவிர்ப்பது முறையாகும்.

முன்னேற்றம் அனைத்துக்கும் அடிப்படையான காரணம் ஆசைபாம். கடவுள்மீது நாம் செலுத்துகின்ற களங்கமற்ற ஆசையைத்தான் பக்தியென்று சொல்லுகிறோம். இத்தகைய ஆசைகள்யாண்டும் மேன்மையளிக்கின்றது.

அகந்தை நோயாலும், ஆசைப்பிணியாலும், பிறவிப்பிணியாலும் துயருறும் மக்கள் 'என்செயலாவதினி யொன்றுமில்லை இனித் தெய்வமே! உன்செயலே' என்றுணரப்பெற்று உருக்கத்

தோடு தன் செயலை முற்றுந் துறந்து இருகையும் விட்டு தன் செயலற்று, இறைவன் தன்னைச் சரணென்று தாள் அடைந்து அருள்கோரின் "அல்லல் என் செய்யும், அருவினை என் செய்யும் தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என் செய்யும்?" (அல்லல், அருவினை; வல்வினைத் தொந்தம்—முறையே பிராரர்த்தம், ஆகாமியம், சஞ்சிதம் ஆகவுமாம்.)

நமது உண்மையான இயல்பினை நாம் அறவே மறந்து வாழுங்கால் முடிவில் நாம் முழுதும் வருந்துகின்றோம். ஒரு மாதத்திற்கு நிலத்திலின்று தக்க உணவு போய்ச்சேராதபோது, அதன் இலைகள் உதிரத்தொடங்குகின்றன. அங்ஙனமே நமது வாழ்க்கையிலும் அது பரம்பொருளாகிய நிலத்தின்கண் அறிவோடு வேறுன்றியிராதபோது, அது வாடுகின்றது; அது இறக்கின்றது. இறைவனைப் பற்றிய நினைவு தானாக எழும்படி செய்தற்குரிய ஒரு வழி முற்காலத்து இந்தியாவில் இருந்துவந்தது; இன்றும் இருந்து வருகின்றது. பல மக்கள் ஒருங்குகூடி இறைவனது பெயரையும், அவரது அழகையும், அவரது அருள், இன்பம், அன்பு, ஆனந்தம், முதலியவற்றையும், அவரும் நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் எவ்வாறு எல்லாவழியாலும் உறவுடையோராவோம் என்பதையும் பற்றிப் பாடிக் கொண்டிருப்பர். "வம்மின் அடியீர் நாண்மலர் இட்டுத்தொழுதுய்ய உம்மன்பினோடெம் அன்புசெய்"

"அடியவர்களே நீவிரும் நாமும் சேர்ந்து பக்திசெய்து புதிய பூக்களையிட்டு (அர்ச்சித்து) வணங்கி உய்யும்பொருட்டு (இங்கே) வாருங்கள்" என்று கூவி அழைக்கின்றார் திருஞானசம்பந்தர். பிரார்த்தனை செய்தற்கு குழந்தையின் நெஞ்சுவேண்டும். அறியாமையிற் கிடந்து துன்பத்திற் சுழலும் சிற்றுயிர்களான நாம் அத்துன்பத்தினின்று விலகி என்றும் அழியா அவரது பேரின்த்தைப் பெறுதல் ஒன்றிலே மட்டுங் கருத்துடையோமாதலால் துன்பத்தைப் போக்கி இன்பத்தைத் தரும் இன்புருவினர்என்று அவரை வழங்குதலே நாம் கடைத்தேறுவதற்கு வழியாதலால் அப்பெயரிட்டு அழைத்தாலே நமக்கு இன்றியமையாத கடமையாகும். நமதறிவிற்குப் புலனுயும் நமதனுபவத்திற்கும் பொருளாயும் விளங்கும் அன்பு அல்லது இன்பத்தின் எல்லையற்றவடிவே

கடவுள் என்றுரைப்போமாயின் அவர் அதற்குடனே இணங்குவர். இம்முடிபு முழுதும் ஒருங்கு அனுபவித்துணர்ந்த திருமூலயோகிகள்.

"அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே"

என்று அருளிச் செய்தார். இன்பவுருவாய் விளங்குதலே கடவுள் சொரூப இலக்கணமாகிய உண்மை நிலையாக இருத்தலாலும், அக்கடவுளைக்குறித்து அழைக்குங்கால் அப்பர் பின்வருமாறு குறிப்பிடுகிறுர்.

"என்னி லாரும் எனக்கினி யாரில்லை
என்னி லும்இனி யான்ஒரு வன்உளன்
என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக் (கு)
என்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே"

நம்முடைய மதத்திற்குச் சைவம் என்னும் பெயர் வந்தது எதனால் என்று ஆய்ந்து பார்க்குங்கால் நமது கொள்கை சிவசம்பந்தம் உடையதாதல் பற்றியே அப்பெயர் பெறுவதாயிற்றென்னும் உண்மை விளங்கா நிற்கும். சிவம் என்னும் மொழி சொல்லாலும் பொருளாலும் இன்பம் ஒன்றையே குறித்தல் பற்றியன்றே அருந்தவச்செல்வரான திருமூலர் "அன்பே சிவமாவ தியாரும் அறிகிலார்" என்று தெளிவுறுத்தி அருளிச் செய்தார்.

இன்பத்தை வெறுத்துக் கொடுந்துன்பக்கடலில் அமிழ்ந்தி அறியாமையில் உழலும் உயிர்கள் அவரைச் சிவம் என்னும் பெயரால் அழைக்கக் கூசுவராயின் அஃதவர் தீவினைப்பயனுவதன்றி வேறென்னை. உயிர்களுக்கு வேண்டியவாறே அவர் துன்பத்தை நீக்கி இன்பத்தைத் தரும் நிலையில் அருள் கனிந்து விளங்கும் ஆண்டவனை அந்நிலைக்குப் பொருந்தவே உருத்திரனென்றும் சிவனென்றும் அழைத்தலும் வழங்கலும் எத்துணைச் சிறந்தனவாயிருக்கின்றது. இதனைப்போலவே அரன், வைத்தியநாதன் என்னும் சொற்களும் துன்பத்தையழிப்பவன் ஆணவநோயைப் போக்குபவன் என பொருள் தந்து சிவபெருமானுக்கே பெயர்களாக வழங்கிவருகின்றனர். ஆனந்தம், இன்பம், அன்பு,

# ஐந்தாங் குரவர்.

(யோகி ஸ்ரீ சுத்தானந்தர்)

கல்வியின் வரம்பு கண்டோன் கடவுண்மாக் கலைகளெல்லாம்
வல்லவன் பிரமசாரி வானெனத் தமிழ் பொழிந்து
செல்வமுந் திருவு மோங்கச் சிவநெறி செழிக்க வந்தோன்
நல்லவர் போற்று நல்லூர் நாவலன் வாழ்க மாதோ.

சென்ற நூற்றாண்டு பல பெரியாரைக் கண்டது. அவருள் சமயதீபமாக விளங்கியோர் இருவர். வடக்கே தயானந்தர் (1824-1883) தெற்கே நாவலர் (1822-1879) இருவரும் வந்திராவிடில், வேதாகமங்கள் வேருடன் மறைந்திருக்கும். தயானந்தர் தூய வேத நெறியை விளக்கினார்; நாவலர் தூய சைவ நெறியைத் துலக்கினார். இருவரும் பிரமசாரிகள்; ஆழ்ந்த ஆராய்ச்சியாளர்; காலத்தையும் ஞாலத்தையும் அறிந்து சிறந்தவர்கள்; உர

---

முற்பக்கத்தொடர்ச்சி.

அருள் என்னுஞ் சொற்களை வழங்குங்கால், அச்சொற்களாற் சுட்டப்படும் இன்பம் என்பது நம் நிலையில் எழ, இன்புருவாயே விளங்கும். ஆகவே, கடவுளை இன்பப் பெயரிட்டு அழைத்தாலே மாட்சி உடைத்தாம் என்பது இனிது புலப்படும்.

ஒரு மனிதன் தன்னை உலகத்தோடும், தனது கவலைகளோடும் ஒன்றுபடுத்திக்கொள்வதைப்போல அவன் தன்னைக் கடவுளோடும் ஒன்றுபடுத்திக்கொள்ளக்கூடும். ஒரு நோயினால் பீடித்திருக்கும் ஒருவன் அதைப்பற்றி ஊன்றி நினைக்க நினைக்க அது முன்னிலும் கொடியதாகின்றது அதனை வெல்லுதற்குரிய வழி யாவது வேறொன்றில்லை. அதாவது உன் மனத்தைக் கவரக்கூடிய ஒரு பொருளில் உனது நினைவை நிலைநாட்டு.

ஆதலின் நண்பீர் துன்பங்கள் நேரும்போதும், நமது மனமும் நெஞ்சும் ஒருமுகப்படுத்தி உறவுபூண்டு நமது தெய்வப் பிறப்புரிமையைப்பற்றி நமக்கு நாமே நினைவூட்டிக் கொள்வோமாக. அவரது நட்பையும் துணையையும் நாம் உண்மையாக நாடுவோமாயின், அவர் நமது பிறப்புரிமையாகிய தெய்வத்தன்மையை நம்மிடம் மீட்டுத்தருவார்.

மான பேச்சாளர்; அஞ்சா நெஞ்சுரங்கொண்டு போலியொழுக்கங்களை உள்ளும் புறமும் கண்டித்தவர்கள். தயானந்தர் சத்தியார்த்தப் பிரகாசம் எழுதினார்; வேதத்திற்கு முன்னுரை தீட்டினார். நாவலர் அரிய, பெரிய பலநூல்களை யாத்தளித்தார்; வேதவியாசர்போலப் பழஞ்செல்வங்களைத் தொகுத்தளித்தார். தயானந்தர் வேதக்கலைபரவ, ஆரிய சமாஜம் கண்டார். நாவலர் சைவசமாஜம் கண்டார்.

ஆறுமுகநாவலர் செய்த சிவபுண்ணியம் ஒப்புயர்வற்றதாகும். அவர் வேதத்தையும் ஆதரித்தார்; ஆகமத்தையும் போற்றினார். அரு, உரு, குரு, ஆகிய மூன்று தெய்வ விளக்கத்தையும் மதித்தார். சிவாகமத்திற்கு மாறானதைக் கண்டித்தார்; முதன்மையாக அக்காலம் படர்ந்துவந்த போலிக் கிறிஸ்துவத்தையே அவர் தக்க ஆதாரங்காட்டி மறுத்தார். அவர் காட்டும் ஆதாரங்களை எதிரிகளும் மறுக்கமுடியாது. நாவலர் பேச்சுடன் நிற்கவில்லை; செயலிலும் முனைந்தார். ஏராளமான கருவிநூல்களையும் சமைய நூல்களையும் தாமே அச்சகம் நாட்டி வெளியிட்டார். பல பாடசாலைகள் கண்டு மாணவருக்குக் கல்வியளித்தார். நமது சமயத்தையும் புராணங்களையும் தூற்றிக் கேலி செய்தவர் வாயை அடக்கினார். 'அஞ்ஞானிகள், சாம்பலாண்டிகள் பேயை வணங்குவோர் கல்லைக்கட்டி அழுவோர்' என்று இந்தியரைத் தூற்றிய பாதிரிமாருக்குச் சரியான பாடம் கற்பித்தார். அன்னிய மோகத்தால் பிறமதம் புகுந்த நம்மவரைச் சிவநெறி தழுவச் செய்தார் தயானந்தர் சுத்தி சங்கடன் இயக்கம் தொடங்குமுன்பே நாவலர் இங்கே சைவசமாஜம் கூட்டி நம்மவரை ஒன்றுசேர்த்தார். திருமுறை நூல்களுக்குப் புத்துயிர் தந்தார். வேதாகமச் சைவத்தின் பெருமை மாந்தர் மனதிற் பதியச்செய்தார். அவர் சொல்லினிமையே பலரைச் சைவராக்கியது.

நாவலர் தமிழருக்கும் தமிழகத்துக்கும் செய்த தொண்டு அளப்பரிது. இனிய உரைநடை வகுத்த புலவர் அவரே. அவர் உள்ளம் "தமிழ் சைவம்" என்றே துடித்தது. அவர் பணத்தை மதிக்கவில்லை; செல்வச் செருக்கைக் கெஞ்சவில்லை; பட்டம் பதவிகளை வேண்டவில்லை, அவர் தலைநிமிர்ந்து நடந்தார்; சிவத்தையே மதித்தார்; உண்மையை உண்மை என்றார்; பொய்யைப் பொய்யென்றார்; தமிழின் பெருமையை நாட்டினார். அப்பர், சுந்த

ரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகியநால்வரும்வந்திராவிட்டால் சைவசமயமேமறைந்திருக்கும்; அவர்களுக்குப்பின் வந்து சைவ சமயத்தைக்காத்தவர் நமது நாவலர்பெருமானே. ஆறுமுகநாவலர் என்பது போதாது, அவர் நாவன்மை படைத்தவர் மட்டுமல்லர். அவரை ஆறுமுகநாயனர் என்பதேதகும். முன்வந்த நான்கு சமயகுரவருக்குப் பிறகு இவரை ஐந்தாங்குரவர் என்பதேபொருந்தும். அக்காலம் ஒருசர்வமதசங்கம் கூடியிருந்தால்சைவத்திற்குப் பிரதிநிதியாக நாவலரையே நாம் அனுப்பியிருப்போம். விவேகானந்தர்போல நாவீறுபடைத்த அருட்பெரியார் நாவலர். அவருக்கு முன்னும் ஒரு நாவலரில்லை; பின்னும் இல்லை; உலக மகான்களில் அவர் ஒருவர். அவர்ஊட்டிய உணர்ச்சி இன்னும் உள்ளத்திற்குள்ளம் சுழன்று பரவுகின்றது. அவர் நாட்டிய நிலையங்கள் ஒன்றுபலவாகி அரியபதி புண்ணியம்செய்துவருகின்றன. அவர் அடிச்சுவடுகள் இன்னும் அழியாதிருக்கின்றன. அவற்றைப்பின்பற்றுவோம்.

## நாவலர் உள்ளத்தெழுந்த சைவவுணர்ச்சி.

கிறிஸ்துவர் இத்தனைபேர்களை மதமாற்றுவதின் இரகசியம் அவருக்குப்புலனானது. கிறிஸ்துவநூல்கள் தெளிவானவசனத்தில் உள்ளன. நமது நூல்கள் கடினமான செய்யுளாயுள்ளன; அவற்றையும் நமதுசமயசாத்திர புராண நூல்களையும் எல்லாரும் அறியும் இளந்தமிழில் எழுதினால் அனைவரும் அறிந்துபயன்பெறுவர் கிறிஸ்துவர் கல்விகற்பிக்கத்தொடங்கி ஜனங்களை வசிகரித்துப்பிறகு தமதுசமயத்தைப் புகட்டுகிறார்கள். நமது சைவசமயம் பரவவேண்டுமானால், முதலில் தக்கபாடசாலைகளை ஊர்தோறும் நிலைநாட்டி எண்ணெழுத்துடன் சமயஞானமும் புகட்டவேண்டும் அப்பாடசாலையிற்பயின்று தேர்ச்சிபெற்றவர்களுக்கு சைவசரித்திரங்களையும் போதனைமுறைகளையும் பயிற்றி, அவர்களைப்பாதிரிமார்போல் மக்களிடையே அனுப்பி சமயப்பிரசாரம் செய்ய வேண்டும். ஊர்தோறும் கிறிஸ்துமதபோதகர்கள் பாமரஜனங்களுக்குப் பிரசங்கம் செய்வதுபோலவே சைவசமய போதகரும் செய்து ஜனங்களைவசப்படுத்தவேண்டும். கிறிஸ்துவர்கள் சர்ச்சுகளில் தொழுகைநடத்துவதுபோல் நம்மவர் திருக்கோவில்களில் திருமுறைநூல்களை ஓதவேண்டும், கிறிஸ்துவர்கள் சுவிஷேசகீத

# நாவலர் காட்டிய ஆரோக்கிய வழி,

ஸ்ரீமதி சரஸ்வதிஅம்மாள்

ஆத்மீகத்திற்கு அடிப்படையாயிருந்து துணை செய்வது
உடம்பு. உடம்பை உபாயமாய்வளர்த்து உயிரைஉயர்நிலைக்குக்
கொண்டுவர இலகுவானமுறைகளைக்காட்டித்தந்தவர் நாவலரே.
அவர் உலகிற்கு எவை அத்தியாவசியமோ அவைமூலம் ஆத்மபரி
பூரணத்தையடையும் மார்க்கத்தைச்சொல்லித்தந்தார்;எழுதிவைத்
தார்; செய்கையிற்காட்டினார்.

ஆசாரமே அவரின் அடிப்படையான முதற்படி. அதன்வழி
போவதுதான் சுலபம்என்று கண்டார்; திடங்கொண்டார். ஆசா
ரவிதி என்றசிறுபுத்தகவாயிலாகச்சுருசுருப்பாய் வெளியிட்டார்.
உடம்பின்புனிதமே மனத்தின்மாசை அகற்றும். மனயாசகன்
றால் அறிவுவிரியும். அறிவுவிரிந்தால் அமைதிநிலவும். அறிவு
நிலவ ஆனந்தம் மிளிரும் என்னும் உண்மையைக் கண்டவர்
நாவலர்பெருமான். நாவலர்பெருமான் ஒரு ஆத்மீகஞானி என்
பதை இவற்றால் அறியக்கிடக்கின்றது. இதை உய்த்துணர்ந்து
பார்க்கில் எத்தகையபேருபகாரத்தை அள்ளிஅள்ளி மக்கட்குவழி
காட்டியிருக்கிறார்என்பதை நாம்மறக்கமுடியாது.

---

முற்பக்கத்தொடர்ச்சி.

ங்கள்பாடுவதுபோல், இந்துக்களும் இன்னிசைக்கருவிகளுடன்
பதிப்பாடல்களை முழக்கவேண்டும். அவர்கள் பொதுக்கல்விக்
கும் சமயக் கல்விக்கும் வேண்டிய நூல்களை அழகாக அச்சிட்டு
எளிதாகப்பரப்புகிறார்கள். நாமும்நமது தமிழ்நூல்களை அச்சிட்
டுப்பலர்படித்துப்பயன்பெறப் பரப்பவேண்டும். பாதிரிமார் நமது
சமயத்திலுள்ள குணதோஷங்களைச் சொல்லுகிறார்கள்; அவர்க
ளுக்குத்தகுந்தபடிபதிற்சொல்லி அவர்கள் சமயத்தின் இயல்பை
யும் நமதுசமயப்பெருமையையும்ஒப்பிட்டுஜனங்களுக்குச் சைவவு
ணர்ச்சி பெருகும்படி சொல்லவேண்டும். நம்மவர்கள் இனிஉறங்
கக்கூடாது; கிறிஸ்துவப்பாதிரிமார்கள்போல கற்றறிந்த சைவப்
பாதிரிகள் எழுந்துசமயப்பிரச்சாரம் செய்யவேண்டும். இன்றேல்
இப்போதுள்ளசிறிதுமதவுணர்ச்சியும் போய்விடும்.

இந்தப்பெரியநன்மையை சுகமானமுறையிற் காட்டித்தந்திருக்கிறார். அவர் ஊணிலிருப்பது உடையீறாகவும் நித்திரை விட்டெழுதல் முதல்நித்திரைக்குச்செல்லும்வரையும் காலையிலிருந்துமறுநாள் உதயம்வரையும் மணிமணியாய்க் கோத்து நித்தியம் நடத்தவேண்டியகருமங்களை இல்லறத்தாருக்குந்துறவறத்தாருக்கும் சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்குபடிகளிலும் அநுட்டிக்கக்கூடிய ஆசாரங்களை ஆங்காங்கு நுளைத்து வைத்திருக்கும் நுட்பங்களைக்காணுந்திறன் நம்போல்வார்கட்கு எட்டுந்திறனன்று. ஆனால் ஆறுமுகநாவலரை அவர் ஒரு சித்தாந்தியென்றோ அல்லது சைவகுரவன்மட்டுமென்றோகுறிப்பிடமுடியாது. அவரின்பரந்து உள்ளத்தில் புதைந்துள்ளபண்பாடுகளே எண்ணிறந்தவை.

சிற்றறிவிற்கெட்டாத பேரருட் செல்வன் ஆனமையாலன்றோ நாவலர் ஊண்முதலியவற்றை உண்ணும் வகைவழிகளைக்கூறுமிடத்து எம்அன்னையாகவும் சிறுசிறு பாலபாடம்முதலியவற்றையுதவியபோதெல்லாம் எமக்குத் தந்தையாகவும் தெய்வவழிபாடுமுதலிய வாக்கியங்களை உதவியபோதெல்லாம் எங்கட்கு குருவாகவும் தெய்வமாகவும் ஆங்காங்கு எதுஎது வேண்டுமோ அந்தந்தஇடங்கட்கு வேண்டியவற்றை எமக்களித்த அருட்பெரியாருமாகின்றனர். இத்தகைய அருட்குரவரின் செவ்வியதிருவடிகளைமறவாது அவர்காட்டியமுறைகளைப் படிப்படியாகஅநுட்டித்துவருவோமாயின் இம்மைமறுமைபேற்றினை அடைவதுதிண்ணம்.

---

## நாவலர் கண்டகனவு

நிலையிலாத என்சரீரம் உள்ளபொழுதே என்கருத்து நிறைவேறுமோ நிறைவேறாதோஎன்னுங்கவலை என்னை இரவும்பகலும் வருத்துகின்றது. அக்கருத்தாவது. தமிழ்க்கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலங்கள்தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப்பிரசாரணம் செய்வித்தலுமேயாம். இவற்றின்பொருட்டுக்கிரமமாகக் கற்றுவல்லஉபாத்தியாயர்களும் சைவப்பிரசாரகர்களும்வேண்டப்படுவார்கள். ஆதலினாலே நல்லொழுக்கமும், விவேகமும், கல்வியில்விருப்பமும், இடையறாமுயற்சியும் ஆரோக்கியமும் உடையவர்களாகப்பரீட்சிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச்சேர்த்து அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்து உயர்வாகிய இலக்கணஇலக்கியங்களையும் சைவசாத்திரங்களையும் கற்பித்தல்வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சியடைந்தவர்களையே உபாததியாயர்களாகவும் சைவப் பிரசாரகர்களாகவும் நியோகிக்கலாம்.

# ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்கள்.

[பண்டிதமணி நவநீதகிருஷ்ணபாரதியார்]

நாவலர் என்றதும் யாரைக்கருதுகின்றீர்கள்? யாழ்ப்பாணத்து நல்லூரில், கார்காத்தவேளாண் குலத்தில், பாண்டிமழவர் குடியில், ஞானப்பிரகாசர் மரபில் அவதரித்த ஆறுமுகநாவலரையே. ஆம்; தமிழ்நாட்டில் அமிழ்தன்ன நாவலர்பலர் உளராயினும்; நாவலர்என்றமாத்திரத்தே நம்உளமலர் ஆறுமுகநாவலரையே தொட்டுஇன்பத்தேன்சொட்டும். இஃது எம்மனோர்க்கு இயல்பாயிற்று. அவர் இலக்கியத்திற் கலக்கமற்றவர்; இலக்கணத்தின் நிலைக்களன். ஆகமஅறிவில் அழுக்கற்றவர்; மெய்கண்டநூற்பயிற்சியில் தூயவர்; நியாயநூற்புலமையில் நிகரற்றவர்; நிறையவை நல்லவை என்னும் ஈரவையும் பிணிப்புறச் சொற்பொழிவாற்றும் மணிப்புலவர்; சிந்தனையாற்றலில், சிவபூசைபுரிதலில், தூயமொழிதலில், அடைந்தாப்புரத்தலில் இடையறவுபடாதவர்; தேன்தமிழ் ஓம்பிய சான்றோரில் முன்னணிபெற்ற நன்மணிப்புலவர்; நன்னெறிக்கடன் ஒப்பும் செந்நெறியாளர் சிந்தையில் இருப்பவர். ஆதலால் அவர்கவியுமாவர். கவிமகனுமாவர்; வாதியுமாவர்; வாக்கியுமாவர்; வார்த்தைநூறாயிரத்தில் ஒருவருமாவர். ஆதலினாலேதான் நாவலர்என்றதும் நம்முள்ளம் அவரைத்தொட்டணைக்கின்றது. அங்ஙனம் அவரை உள்ளம் அணைக்குமாறு ஒவ்வொருதமிழனும் சைவனும் உன்னவேண்டும்; உன்னிப்பன்னவேண்டும்; பன்னிப் பணியவேண்டும்; பணிந்தொழுகவேண்டும்; ஒழுக அவர் விரிந்த சிந்தையையும், குவிந்தகுணத்தையும், பரித்ததவத்தையும் பெறுதல்வேண்டும்; பெற்றனவற்றைப் பிறர்க்கீதல்வேண்டும்' ஈந்து நாட்டைநன்னிலைமையில்வைத்து விளக்கமுறச் செய்தல்வேண்டும். அங்ஙனம்செய்து உவகைபூத்தல்வேண்டும். இவை நாவலருக்கு நாமாற்றும் பூஜைப்பொன்மலர்கள்.

எந்தநாடுகளும் தத்தமக்குரியநெறிகுன்றி, நினைப்புமபோய் நிலையும்கெட்டு, செய்வன அறியாது தவிர்வன தவிராது திகைப்புறும்வேளையில், அந்நாடுகளின் திகைப்புநீக்கி, தவிர்வன தவிர்த்து செய்வன அறிவுறுத்தி, நினைப்பையும் நிலையையும் உயர்த்தி, நன்

னெறி காட்ட, அவதார புருஷர்கள் தோன்றுவரென அந்நாடு கள் நம்பி எதிர்பார்த்திருப்பதை நாம் அறிவோம். நம் யாழ்ப் பாணநாடு அந்நியர் ஆதிக்கத்தால் மொழிப்பற்றற்று வளங்குன் றியகாலத்தே, சைவமும் ஓம்புவார் சுருங்கிப் பொலிவிழந்திருந்த காலத்தே, அந்நியர் மதம் நம்மை மறைத்து நம் கலாசாரங்கட் குப் பேரிடர் புரிந்த காலத்தே, தமிழும் சைவமும் புத்துயிர் பெறத்தோன்றிய அறிவு வள்ளல் நாவலர்.

⁂ ⁂ ⁂ ⁂

எந்த நிலைக்கும் அத்திவாரம் போன்ற கல்வியை அந்நாட்டு நிலைக்குரிய கலாசாரங்கட்கேற்பக் கொடுக்கவல்ல கல்விநிலையங் களை அமைத்தும், அவ்வக்காலத்து நேரும் இடையூறுகளைக் களை தற்காகிய வாய்மைக் கட்டுரைகளைப் பாப்புதற்கேற்ற பத்திரி கைகட்கு உறுதுணைபுரிந்தும், இலகுவிற் பல நுண்ணிய விஷயங் களைப் பலரும் அறிந்துகொள்ளுதற்கேற்ற சொற்பொழிவுகள் ஆற்றியும், இவற்றிற்கேற்ற வசன நடையைத் தாமே தீர்க்கதரிசி யாய் இருந்து ஆக்கியும், அழிந்தொழியும் நிலையில் இருந்த, நம் கலாசாரங்களைக் கண்முன்னர்க் காட்டும் அருமருந்தன்ன நூல் களையும், ஏற்ற பல புதிய நூல்களையும் பதிப்பித்து வெளியிட் டும், ஐவகையில் அருந்தொண்டாற்றிய நறுந்தமிழ் நாவலர்க் கிணை நாவலர்தாம்.

⁂ ⁂ ⁂ ⁂

அவர், இந்தியாவிற் சிதம்பரத்திலும், யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணை, கோப்பாய், புலோலி, இணுவில், கொழும் புத்துறை ஆதியாம் இடங்களிலும் கல்வி நிலையங்களை நிறுவினர். அவை தமிழும் சைவமும் தழையவூட்டும் ஊருணிகள். அந்நாவ லர் காலத்தே மாகாணத்தலைவராயிருந்த மிஸ்ரர் கே. எஸ். ஓ. றசல் என்பவர், வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையின் பர ந்தகொள்கையைப்பற்றியும், மற்ற அதன்வளர்ச்சிபற்றியும்நேரிற் போய்க்கண்டு எழுதியவசனங்கள் பலரும் அறிந்தவை "சைவோ தயபானு" என்னும் பத்திரிகையின் தோற்றத்திற்குக் காரணரும் அவரேயாவர்.

⁂ ⁂ ⁂ ⁂

இப்பைந்தமிழ் வியாசர்பதிப்பித்த இலக்கணநூல்களும்பல; சமயநூல்களும்பல; தருக்க நூல்களும்சில; அந்தாதிகளும் பல; அறநூல்களும் பல; இதிகாசநூல்களும்பல; புதியனவாக இயற்

றிய உரைநடை நூல்களும்பல; பாடசாலைச்சிறுவர்பொருட்டு இய ற்றியஇளந்தமிழ்நூல்களும்பல; பிறர்மதத்தைப் பரிகரித்துச்சுவ மதநாட்டிய கண்டன நூல்களும்பல; புதிதாகஉரைகண்ட நூல் களும்பலவாம். அந்நூல்களைப்பகுத்துத்தனித்தனி அவற்றின்மா ண்பை எடுத்துரைக்கப்புகின் மிகவிரியும். அன்றியும் அவை உரையுட்படுவனவல்ல. பல்லாற்றானும் அவர் தமிழகத்திற்கு ஈந்த நூற்பெயர்க்கடலை அவர் புராணத்துள்ளும் பிறவற்றுள்ளும் ஆர்வ முடையார் காண்பார்களாக.

⁂ ⁂ ⁂ ⁂

செயற்கரிய செய்த பெரியார்களை, அவர் காலத்தே மக்கள் நலிதலும், பிற்காலத்தே அம்மக்கள் பிழையையுணர்ந்து, அவர் கள் பெருமையை நினைந்து யாவரும் போற்றிவருதலும், எஞ்ஞா ன்றுமே போற்றிவருதலும், உலகின் எப்பகுதிக்குமுரிய நாகரிக மாயிற்று. எல்லாத் தேசங்களும் தம்மிடத்தே தோன்றித் தம் நலம் மறந்து சேவைசெய்த நாவலர் பெருமானுக்கு விழாவும் பூசையும் எடுத்துவருகின்றன. சில இடங்களிலே நாவலர் ஆற் றிய அருந்தொண்டைப்போல் ஆயிரத்தில் ஒன்றுதானும் ஆற்று தார் பொருட்டு, எவ்வளவு பொருட்செலவு செய்து, ஞாபகார் த்த மண்டபங்கள்கட்டி, காலந்தோறும் புதியபுதியநிகழ்ச்சிகளை ஏற்றவாறுநிகழ்த்தி, எல்வளவுபெருமைபாராட்டிக் கௌரவித் துத்தம்நன்றியறிதலைக்காட்டுகிறார்கள்; அவர்செயல்அங்ஙனமாக, நாம் இங்ஙனமே கண்டதே கண்டு, செய்ததே 'செய்து' வருதல் நம் பேடித்தனத்தையே காட்டுகின்றது. இன்று நாம் நிகழ்த்தி வரும் நாவலர் நினைவு நிகழ்ச்சிகள் நமக்குஎத்தகைய ஆக்கத்தைப் பயக்கும். சிறிதும் ஆக்கம் பயவாத முறையில் ஏதோ ஒரு விள க்கை ஏற்றிவைத்து விட்டு, ஐந்தாறுபேர் கூடியிருக்க, ஒருவர் நாவலர் குணக்கடலில் தாம் வைத்திருக்கும் அளவு கருவியைக் கொண்டு ஒரு கொத்தோ புசலோ முகந்து கொட்டிவிட்டுப்போ னாற் போதும் என்ற வாறாக அலட்சியமாகக்கொண்டாடுகிறோம். இஃதென்ன அறியாமை! ஆம்; அறியாமைதான். உண்மையில் நாம் இன்னும் நாவலரை அறியவில்லை; அறிந்தால்அவர்பொருட் டுமடாலயங்கள் கட்டியிருப்போம்; அவற்றைநாவலர் புத்தகால யங்களாகத் திகழ்விப்போம். ஆங்கே அறிஞர்களைக் கூட்டுவோம்; அவற்றை இருபகுதிப்பட்ட இளைஞர்கட்கும் முதியோர்கட்கும் எடுத்துரைப்போம். கிராமந்தோறும் அவர் நினைவு விழாவை

# பேச்சுக்கலை,

கலை! மக்களின் வாழ்வுக்கு இன்பப் பெரு ஊற்றாகத் திகழ்வதும், திகழ்ந்து வருவதும் கலை! கலை உணர்ச்சி ஒன்றே மக்களையும் மாக்களையும் பிரித்துக் காட்டிவருகிறது. கலை உணர்ச்சியற்ற மக்களின் உள்ளத்தில் அழகு அரும்பப் பூப்பதேயில்லை. ஏனெனில் கலையே அழகு! அழகே கலை!

கலை பலவகை. அதில் பேச்சு ஒரு வகை. பேச்சுக்கலை மக்கள் பெற்றுள்ள பெரும் செல்வங்களில் ஒன்று. அது சிறப்புச் செல்வமும் ஆகும். மின்னுவதெல்லாம் பொன்னல்ல; எண்ணுவதெல்லாம் நினைவல்ல; உண்ணுவதெல்லாம் உணவல்ல; என்று கூறுவதுபோல "பேசுவதெல்லாம் பேச்சல்ல" என்று கூறலாம்.

இங்கு பேசவந்த பேச்சு, பலர் முன்னே மேடை ஏறிப் பேசுகின்ற பேச்சு! இதனை, தமிழறிஞர் 'சொற்பொழிவு' எனக் கூறுவர். சொற்களைப் பொறுக்கித் தேர்ந்தெடுத்து, அவற்றை ஒழுங்குசெய்து கோவைப்படுத்தி, வரம்பு கடவாது பொழிகின்ற ஒன்றே 'சொற்பொழிவு' என்றாகும்.

ஒரு நல்ல சொற்பொழிவுக்கு, கருத்துகள் மிகவும் தேவை.

---

முற்பக்கத்தொடர்ச்சி.

நிகழ்த்துவோம்; அவ்விடமெல்லாம் அறிஞர்களை வரவழைத்து அந்நாவலருடைய அருஞ்செயல்களையும் குணங்களையும் பிறவற்றையும் எடுத்து மொழியச்செய்வோம்; நாமே நாவலராய், நாவலர் புத்தகாலயமாய், நம் நாடாய், உலகமாய் உயர்வெய்துவோம். அப்படி முடிந்ததொன்றுமில்லை என்றுதான் கூறவேண்டும். அவர் விரிந்து பரந்த நோக்கத்தை எரிந்து புகைந்து குறுக்கே முனைந்து நிற்கிறோம். ஒரு திருநாவலர் தோன்றிய தியாக பூமி இன்று தியாகம் மருந்துக்கும் கிடைக்கப்பெறாதாய் இருக்கின்றது என்று இழி பெயரேற்று நிற்கிறது. நாவலரால் உயர்வெய்திய நாடு, நாவலர் பெயர் கூறிப் பெருமைப் பட்டுக்கொள்ளுதலையே விரும்பும் நம்மால் தாழ்வெய்திக் கிடக்கின்றது. நாவலர் மீண்டும் வருவாரா?

[இந்துசாதன வச்சிரவிழா மலரிலிருந்து சுருக்கி எடுக்கப்பட்டது]

கருத்து நிறைந்த பேச்சு நெல் போன்றது. கருத்து இல்லாத பேச்சு பதர் போன்றது. அரிசியும் உமியும் கலந்ததுதான் நெல். கருத்தும் சொல்லும் கலந்ததுதான் பேச்சு. விளை நிலத்தில் முளைப்பது அரிசிமட்டுமே; உமியல்ல. மக்கள் உள்ளத்தில் பதிவது கருத்துமட்டுமே; பேச்சல்ல; உமிநீங்கிய அரிசியைநிலத்தில்விதைக்க முடியாததுபோல, பேச்சு இன்றி மக்கள் உள்ளத்தில் கருத்தை விதைக்க முடியாது. நல்லேர்கொண்டு களர் நிலத்தை உழுதலும் சொல்லேர் கொண்டு பலர் உள்ளத்தை உழுதலும் ஒன்றேயாம்.

நீங்கள் கேட்டது ஒரு சிறந்த சொற்பொழிவுதானா? என்பதை அளந்து அறிய ஒரு அளவு கருவியுண்டு! அது உங்கள் உள்ளத்தில் பதிந்த கருத்துக்கள் எத்தனை? என்ற கேள்வியேயாகும். சொற்களை ஊதி ஊதிப் போக்கிவிட்டால் கருத்து காணப்படவேண்டும். உமியை ஊதி ஊதிப் போக்கிவிட்டால் அரிசி காணப்படுவதுபோல. காணப்படாவிடில் அது சொற்பொழிவு ஆகாது, நெற்பதரைப் போன்றே அதுவும் ஒரு சொற்பதராகத் தொலைந்துபோய்விடும். ஆகவே கருத்தமைந்த பேச்சே கலைப் பேச்சாகக் காணப்படும்.

எழுதிப்படிப்பது என்பது ஒருமுறை. அது பொறுப்புள்ள பதவியிலுள்ளவர்களுக்கு ஏற்றதாக இருக்கலாம். பேச்சாளர்களுக்கு அது எப்போதும் ஏற்றதல்ல. ஏனெனில் அதில் உணர்ச்சியே இராது. படிப்பு வேறு; பேச்சுவேறு, பேச்சு பேச்சாக இருக்கவேண்டுமே ஒழிய படிப்பாக இருக்கக்கூடாது. இன்னும் ஒரு தவறானமுறை உண்டு. அது எழுதி, படித்து, மனப்பாடம் செய்து வந்து பேசுவதுபோலப் பேசுவது. இது பேச்சுமல்ல; படிப்புமல்ல; நடிப்பு என்றாகும். அதோடு மக்களை ஏமாற்றுவதாகவும் வந்து முடியும். இது பெருந்தவறு. இதில் பேச்சுக்கலையையோ, கருத்துக் கலையையோ காணமுடியாது. ஏதேனும் காணமுடிந்தால், அது பேசுகிறவனுடைய வயதுக்குமீறிய புத்திமதிகளாகவும் அறிவிற்கு மீறிய உவமைகளாகவும், கல்விக்குமீறிய சொற்களாகவுமே இருக்கும். இது நகைக்க உதவுவதன்றி சுவைக்க உதவுவதில்லை.

ஒரு பேச்சாளனுக்கு முதல் தேவை 'உணர்ச்சி' ஒன்றேயாகும். நாவன்மையும், மனத்துணிவும் உணர்ச்சியற்றவனுக்கு ஒருபோதும் வரா. உண்மையும் இருந்து உணர்ச்சியும் தோன்றி விடுமானால் வன்மை உள்ள பேச்சு வருத்தமின்றிகிளம்பும். உணர்ச்சியுள்ள எவராலும் பேசமுடியும்.

உணர்ச்சியுள்ள ஒருவனிடத்தில் கல்வியுமிருந்து, கற்றவர்களிடத்து கேட்டகேள்வியமிருந்து, கேள்விப்பட்டவைகளை ஆராய்ந்து அறியும் அறிவும் இருந்து விட்டால், அவனுடைய பேச்சு உச்சநிலையை அடையும். அவன் ஒரு பேச்சாளியாகத்தான் திகழ்வான். அழவளவுதான். அதனால், அவனால் நமக்கோ நாட்டிற்கோ என்ன பயன்? அவனிடத்தில் 'ஒழுக்கம்' என்ற ஒன்று இல்லாமற்போகுமானால், அவன் பெற்ற அனைத்தும் பாழாய்ப் போய்விடும். அவன் பேச்சு கேட்போர் உள்ளத்தில் வெறுப்போடுதான் பாயும். "குடியும் குறளும்" என்ற தலைப்பைக் கொடுத்து ஒரு குடிகாரனைப் பேசச்சொல்லிப்பாருங்கள் அவன் எதைப் பெற்றிருந்தாலும் ஒழுக்கம் ஒன்றைப் பெறாமையினால் அவன் பேச்சில் உயிர் இல்லாமற் போய்விடும். ஒழுக்கம் உடையவரது பேச்சின் உள்ளே ஒரு உயிரோட்டம் ஓடும். ஆதலால் அது நாட்டுமக்களால் நன்கு வரவேற்கப்பெறும். சேற்றுநிலத்தில் வழுக்கி, வழுக்கித் தள்ளாடி நடக்கும் மக்களுக்கு ஊன்று கோல் உதவிசெய்வதுபோல் வாழ்க்கையில் வழுக்கி, வழுக்கித் தள்ளாடி நடக்கும் மக்களுக்கு ஒழுக்கமுடையவர்களுடைய பேச்சு உற்ற துணையாகி உதவியும் செய்யும்.

ஒரு பேச்சாளனுக்கு செயற்கையாக இருக்கவேண்டிய இவைகளோடு இயற்கையாகவும் சில அமைந்திருப்பது நல்லது அது உயர்ந்த தோற்றமும், பரந்த மார்பும், சிறந்த குரலும், ஆகும். அதுவும் அமைந்திருந்தால் அவனது பேச்சில் இன்னொலியும், மின்னொளியும் இலங்கித் தோன்றும். சிறந்த ஒலியை உடைய குரல் அமையப்பெறாதவர்கள், பிற சிறப்புக்களைப் பெற்றிருந்தால், அவர்கள் பேச்சாளியாகஇருக்க விரும்புவதைவிட எழுத்தாளியாக இருக்க விரும்புவதே நல்லது.

'மலையளவு பேசுவதைவிட கடுகளவு செய்வது நல்லது' என்றகருத்தையும்பேச்சுக்கலையில் புகுத்தவேண்டும். அது நாட்டிற்கு நலம் விளைவிக்கும் நல்ல கருத்துக்களில் ஒன்றாகும்.

(திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் திருச்சி வானொலிநிலையத்திலிருந்து பேசியதின் சாரம்)

# செய்தித்திரட்டு.

## தொண்டர்சபை (மண்டைதீவு)

இச்சபை 21-9-50 வியாழக்கிழமை புதிதாக ஸ்தாபிக்கப்பெற்றது. ஷெ சபையின் ஆதரவில் கடையிற்சாமியார் குருபூசை 25-9-50 திங்கட்கிழமை சுவாமிகள் தங்கிய நிலையத்தில் நடைபெற்றது.

## காந்தியடிகள் தினம்

7–10–50ல் அ. இ. கா. சே, சங்கக் கிளையின் ஆதரவில் மெய்கண்டான் பாடசாலையில் நடைபெற்றது. பிரார்த்தனையின்பின் மாணவர் பேச்சுக்கு பரிசுகள் வழங்கப்பெற்றன. ஆசிரியர்கள் இ. கந்தையா, பொ. கந்தையா, ஆ. மார்க்கண்டன், நா. சிவபாதசுந்தரன் ஆதியோர் சொற்பொழிவாற்றினர்.

## மறைமலையடிகள்தினம்

9-10-50ல் பண்ணாகம் தெற்குவாலிபசங்க ஆதரவில் மெய்கண்டான் பாடசாலையில் நடைபெற்றது. வித்துவான்கள் வேந்தனர், முத்துக்குமாரன் முதலியார் செ. சின்னத்தம்பி ஆதியோர் பேசினர்.

## நவராத்திரிபூஜை

குருநாக்கல் சைவமகாசபை, கண்டிச் சைவமகாசபை, வதுளைச் சைவபரிபாலன சங்கம், நாவலப்பிட்டி இந்துவாலிப சங்கம் ஆதிய இடங்களில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது

## ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்

14-10-50ல் நாவலப்பிட்டி இந்துவாலிப சங்க ஆதரவில் நடைபெற்றது, திரு. க. வடிவேற்சுவாமிகள் சங்கீத உபந்நியாசம் செய்தார்கள்.

## தீபாவலியும் கந்தஷஷ்டியும்

நாவலப்பிட்டி இந்துவாலிப சங்க ஆதரவில் தீபாவளி தினமும் கந்தஷஷ்டியும் கொண்டாடப்பட்டன. அத்தருணம் திரு. க. வடிவேல்சுவாமிகள் கந்தபுராண த்திலிருந்துதொடர்பாக (ஆறு நாட்கள்)விஷயங்கள் பேசினூர்கள்.

## ஸ்ரீசிவானந்தரின் இலங்கை விஜயம்

சென்ற மாசம் 2-ம் வாரம் இலங்கையில் சிவானந்த வாரம் என்றே சொல்லலாம். அந்த வாரத்தில் எங்குச்சென்ருலும் அவருடைய பேச்சே. எந்தப் புதினப் பத்திரிகையைப் புரட்டினுலும் அவருடைய படமே தரிசனமளித்தது. பத்திரிகையின் எந்த மூலையில் பார்த்தாலும் ராமநாமமே மிளிர்ந்தது. இவற்றுக்கெல்லாம் காரணம் சுவாமிகள் ஒக்ரோபர் 12-ம் 13-ம் தேதிகளில் கொழும்பில் தங்கியிருந்தமையே.

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் அன்பர்கள் பலர் சுவாமியின் தரிசனேக்காக கடல் போல்திரண்டுவந்து கொழும்பில் கூடினூர்கள். சுவாமியின் இமாலயம்போன்ற தவபீடத்திலும் அமிர்தம்போன்ற ராமநாமத்திலும் மனமழிந்து ஆனந்தபரவசமாயினர்.

சுவாமிகளின் இலங்கை விஜயம் இலங்கைவாழ் மக்களுக்கு ஆத்மீகஉலகில் ஓர்விழிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதேதொடர்பில் சுவாமிசுத்தானந்தபாரதியார் அவர்களும் இலங்கையின்பலபாகங்களுக்கும் அடுத்தமாசத்தில் விஜயஞ்செய்ய இருக்கிருர். இலங்கை மக்களின் தவமே இத்தகைய மகான்களின் தரிசனேக்குக் காரணமாகும்.

(சுவாமியின் இலங்கைச் சொற்பொழிவுகளிலிருந்து திரட்டியவை)

நான் இனிப்புகைப்பிடிக்கமாட்டேன் கோவிந்தா
பொய்சொல்லமாட்டேன் கோவிந்தா
லஞ்சம் வாங்கமாட்டேன் கோவிந்தா
பிறருக்கு உதவுவேன் கோவிந்தா

கவலையைக் களைந்தெறிவது கடவுளின்
நாம பஜனையே

பெண்கள் இயற்கையாகவே தெய்வத்
தன்மை பொருந்தியவர்கள்.

வாழ்க்கையில் ஒருலட்சியமும் திட்டமும்
நமக்கு வேண்டும்.

அந்திய காலத்தையாவது ஆன்மீகவிசாரணையில
ஈடுபடுத்துக

பணத்தை நம்பவேண்டாம் ஆண்டவனை
நம்புங்கள்.

தூய்மையான மனமே சிறந்த குரு. குறைவாக உணவு அருந்துங்கள். குறைவாகப் பானம் அருந்துங்கள்; சொற்பமாகப் பேசுங்கள்; சிறுதுயில் கொள்ளுங்கள்; தக்காருடன் சேருங்கள்; ஆசனம் பிராணயாமம் செய்யுங்கள்; சாந்தம், கட்டுப்பாட்டுடன் வாழுங்கள்.

————

# ஸ்ரீ சுத்தானந்தர்

## இலங்கை விஜயம்.

புதுவைத் தவயோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள் மார்கழிமாசம்பின் பகுதியில் இலங்கை விஜயஞ்செய்ய உடன்பட்டிருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். அவர் வருந்தினமும் இலங்கையில் அவர் விஜயஞ் செய்ய இருக்கும் இடங்களின் விபரங்களும் அடுத்த 'ஆத்மஜோதி'யிலும் ஏனைய பத்திரிகைகளிலும் வெளிவரும். அவரது அகில இலங்கை அட்டவணை கொழும்பில் ஓர் நிர்வாகசபையினாலேயே நிச்சயிக்கப்படும். மேலும் விபரம் அறியவிரும்புவோர் கீழ்க்கண்ட அதின் காரியாலயத்திற்கு எழுதிப்பெறலாம்.

நிர். 60, டல்பிளேஸ்,
கொள்ளுப்பிட்டி
கொழும்பு, 3